# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2015 செப்டெம்பர் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**VI.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**VII.** **அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்**

**VIII.** **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

**IX.** **சபை நடவடிக்கை** - I

**<u>சபை நடவடிக்கை தொடர்பான விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா)</u>** :

பிரேரணை :

"இன்றைய தினம் பொது நடவடிக்கை முக்கியத்துவம் பெற வேண்டும். "

**சபை நடவடிக்கை** - II

**<u>சபை நடவடிக்கை தொடர்பான விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா)</u>** :

பிரேரணை :

"இன்றைய தினம் (2015.09.22) நிகழ்ச்சி நிரலில் பொது நடவடிக்கை விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் ஒழுங்கு முறை இலக்கம் 06, 07,01,02,03,04 மற்றும் 05 என்ற முறையில் இடம்பெற வேண்டும் எனக் கருதிச் செயற்பட வேண்டும். "

**X.** **தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்**

**01.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ அவர்கள்**

மேல் மாகாணத்தில் இவ்வேளையில் பாடசாலை பிள்ளைகள், பெற்றோர்களிடமிருந்து இடைக்கிடையே நிதி அறவிடப்படுகின்றது, முதலாம் தரம், ஆறாம் தரம், மற்றும் பன்னிரண்டாம் தரங்களுக்காக பிள்ளைகளை ஆட்சேர்க்கும் போதும் அதேபோல், வேறு வகுப்புக்களின் தேவைகளுக்காக பிள்ளைகளிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் நிதி சேகரிக்கப்படுவதனால் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உட்பட்டுள்ளனர் எனவே மேல் மாகாணத்தில் பாடசாலை பிள்ளைகளிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும் நிதியினைச் சேகரிப்பதை (வசதிக் கட்டணத்தைத் தவிர) நிறுத்த வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi (1)14/09)**

**02.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி அவர்கள்**

"மேல் மாகாண பாடசாலைகளில் முதலாம் தரத்திற்காக பிள்ளைகளை சேர்க்கும் போது பிள்ளைகளையும் பெற்றோர்களையும் பாதிப்புக்கு உட்படுத்தும் தற்போதைய முறையினைத் திருத்தும் தேவை தோன்றியுள்ளது. அதற்காக பிள்ளைகளை பாடசாலைக்கு ஆட்சேர்க்கும் தினம் தொடக்கம் ஒரு மாதம் நிறைவடைய முன் எல்லா வெற்றிடங்களையும் நிரப்பி நிறைவு செய்வது, பாதுகாப்பு பிரிவுகளில் கடமையாற்றுபவர்களின் பிள்ளைகளின் பெயர்ப் பட்டியலை பிள்ளைகள் ஆட்சேர்க்கப்பட்ட தினத்தில் இருந்து மூன்று வாரங்கள் நிறைவடைய முன் மாகாண சபைக்கு கிடைப்பதற்கு வழி செய்தல், அதிகாரத்தில் உள்ள

கட்சி உறுப்பினர்களினால் முன்வைக்கப்படும் பெயர்ப் பட்டியலுக்கு இணங்க பிள்ளைகளை ஆட்சேர்க்கும் முறையை இரத்துச் செய்தல்,

நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளும் எல்லாப் பிள்ளைகளுக்கும் கிடைக்கப் பெறும் புள்ளிகளுக்கு இணங்க உறுதியான ஆவணம் ஒன்றினை புள்ளிகளின் ஒழுங்கு முறைக்கு இணங்க தயாரிப்பதற்கும், பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் ஒழுங்கு முறைக்கு இணங்க பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும், எனவும், இதற்கிணங்க மேல் மாகாணத்தின் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையை ஒழுங்கு படுத்தி பாடசாலை ஒன்றுக்கு பிள்ளை ஒருவர் சேர்வதற்கு உள்ள மனித உரிமையை மாகாண மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது." **(பி/vi (1)14/10)**

## XI. பொது நடவடிக்கை

**01. உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா) :**

**பிரேரணை :**

**நீர் கொழும்பு மாநகர சபை பிரதேசத்தில் தனியார் சந்தைகளை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல், நிர்வகித்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணை விதி**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் கூறப்பட வேண்டிய 252 ஆவது அத்தியாயமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் "அப்போதைய மேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மின்சக்தி மற்றும் மின்வலு, மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்டு,

அவ் அங்கீகாரம் தொடர்பான அறிவிப்பு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1622/21 ஆம் இலக்க மற்றும் 2009.10.07 ஆந் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட,

நீர் கொழும்பு மாநகர சபையினால், 252 அதிகாரமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட "நீர் கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் தனியார் சந்தைகளை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல், நிர்வகித்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைவிதி" என்ற பெயர் கொண்ட துணை விதி

மேலே குறிப்பிடப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் கூறப்பட வேண்டிய 252 ஆவது அத்தியாயமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 268 ஆவது பிரிவின் கீழ் அங்கீகரிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது' என்ற பிரேரணை தெரிவித்து அவ் இடைக்கால துணை விதி மாகாண சபைக்கு 2015.06.09 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன்

இதற்கிணங்க அன்றைய தினம் அங்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 2015.07.09 ஆந் திகதி நடைபெற்ற சட்ட நியதிச் சட்ட செயற்குழுக் கூட்டத்தில் அது தொடர்பாக மேலும் கலந்துரையாடப்பட்டு, அச் செயற்குழுவின் சிபாரிசு உள்ளிட்ட அறிக்கை 2015.07.21 ஆந் திகதி இம் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட படியாலும் அத் துணை விதி தொடர்பாக கிடைக்கப்பெற்ற அச் செயற்குழுவின் சிபாரிசு தொடர்பாக கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

**02. உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா) :**

**பிரேரணை :**

**நீர் கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்தினுள் மாநகர சபையின் மூலம் நிர்வகிக்கப்படும் வீதிகளில் பல்வேறுபட்ட அரசாங்க/பகுதி அரசாங்க/ கூட்டுத்தாபன / சபை/ கம்பனி மற்றும் ஆட்களினால் நீர்க்குழாய் இடுதல் மற்றும் நிலக்கீழ் கம்பிகளை இழுத்தல் தொடர்பிலான துணை விதிகள்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் கூறப்பட வேண்டிய 252 ஆவது அத்தியாயமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் "அப்போதைய மேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மின்சக்தி மற்றும் மின்வலு, மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்டு,

அவ் அங்கீகாரம் தொடர்பான அறிவிப்பு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1622/21 ஆம் இலக்க மற்றும் 2009.10.07 ஆந் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட,

நீர் கொழும்பு மாநகர சபையினால், 252 அதிகாரமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட "நீர் கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் மாநகர சபையினால் நிர்வகிக்கப்படும் வீதிகளில் பல்வேறுபட்ட அரசாங்க/பகுதி அரசாங்க/ கூட்டுத்தாபன / சபை/ கம்பனி மற்றும் ஆட்களினால் நீர்க்குழாய் இடுதல் மற்றும் நிலக்கீழ் கம்பிகளை இழுத்தல் தொடர்பான துணை விதிகள்" என்ற பெயர் கொண்ட துணை விதிகளை,

மேலே குறிப்பிடப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் கூறப்பட வேண்டிய 252 ஆவது அத்தியாயமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 268 ஆவது பிரிவின் கீழ் அங்கீகரிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது என்ற பிரேரணை தெரிவித்து அவ் இடைக்கால துணை விதிகள் மாகாண சபைக்கு 2015.06.09 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன்

இதற்கிணங்க அன்றைய தினம் அங்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 2015.07.09 ஆந் திகதி நடைபெற்ற சட்ட நியதிச் சட்ட செயற்குழுக் கூட்டத்தில் அது தொடர்பாக மேலும் கலந்துரையாடப்பட்டு அச் செயற்குழுவின் சிபாரிசு உள்ளிட்ட அறிக்கை 2015.07.21 ஆந் திகதி இம் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட படியாலும் அத் துணை விதிகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற அச் செயற்குழுவின் சிபாரிசுகள் தொடர்பாக கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

**03. உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா) :**

**பிரேரணை :**

**நீர் கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்தினுள் மாநகர சபையின் மூலம் நிர்வகிக்கப்படும் வீதிகளில் பல்வேறுபட்ட அரசாங்க/பகுதி அரசாங்க/ கூட்டுத்தாபன / சபை/ கம்பனி மற்றும் ஆட்களினால் நிர்மாணிக்கப்படுகின்ற அல்லது பொருத்தப்படுகின்ற கம்பங்கள் தூண்களின் நிறைவுறும் பணிகளை நிருவகித்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணை விதி**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் கூறப்பட வேண்டிய 252 ஆவது அத்தியாயமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 268

ஆவது பிரிவின் கீழ் "அப்போதைய மேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மின்சக்தி மற்றும் மின்வலு, மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்டு,

அவ் அங்கீகாரம் தொடர்பான அறிவிப்பு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1622/21 ஆம் இலக்க மற்றும் 2009.10.07 ஆந் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட,

நீர் கொழும்பு மாநகர சபையினால், 252 அதிகாரமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆவது பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட "நீர் கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் நிர்வகிக்கப்படும் வீதிகளில் பல்வேறுபட்ட அரசாங்க/பகுதி அரசாங்க/ கூட்டுத்தாபன / சபை/ கம்பனி மற்றும் ஆட்களினால் நிர்மாணிக்கப்படுகின்ற அல்லது பொருத்தப்படுகின்ற கம்பங்கள் தூண்களின் நிறைவுறும் பணிகளை நிருவகித்தல் மற்றும் கட்டணம் அறவீடு தொடர்பான துணைவிதி" என்ற பெயர் கொண்ட துணை விதியை,

மேலே குறிப்பிடப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் கூறப்பட வேண்டிய 252 ஆவது அத்தியாயமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 268 ஆவது பிரிவின் கீழ் அங்கீகரிக்க வேண்டும் என இம்மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது' என்ற பிரேரணை தெரிவித்து அவ் இடைக்கால துணை விதிகள் மாகாண சபைக்கு 2015.06.09 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன்

இதற்கிணங்க அன்றைய தினம் அங்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 2015.07.09 ஆந் திகதி நடைபெற்ற சட்ட நியதிச் சட்ட செயற்குழுக் கூட்டத்தில் அது தொடர்பாக மேலும் கலந்துரையாடப்பட்டு அச் செயற்குழுவின் சிபாரிசு உள்ளிட்ட அறிக்கை 2015.07.21 ஆந் திகதி இம் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட படியாலும் அத் துணை விதிகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற அச் செயற்குழுவின் சிபாரிசுகள் தொடர்பாக கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

**04.** **உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா) :**

**பிரேரணை :**

**<u>மேல் மாகாணத்தின் முதலமைச்சர் நிதித் திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட நகல் பிரதி துணை விதி (மேல் மாகாணத்தின் நகர சபையின் அதிகார பிரதேசங்களுக்கு உரியதாக)</u>**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் கூறப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (உடன்பாடு காணப்பட்ட துணை விதி) சட்டத்தின் 02 ஆவது பிரிவின் 01 ஆவது உப பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு,

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1888/46 ஆம் இலக்க 2014.11.14 ஆந் திகதி அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதன் பின் 1988 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விலைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (உடன்பாடு காணப்பட்ட துணை விதி) சட்டத்தின் 02 ஆவது பிரிவின் (03) ஆவது உப பிரிவின் கீழ் அங்கீகரிக்க வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது. என்ற பிரேரணை 2015.06.09 ஆந் திகதி இம் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நகல் பிரதி துணை விதிகள்

அதாவது அத்துணைவிதிகள் ஆவன

- i) நகர சபை பிரதேசத்தில் அலங்கரிப்புப் பணிகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான துணை விதி
- ii) நகர சபை பிரதேசத்தில் வெதுப்பம் தொடர்பான துணை விதி
- iii) நகர சபை பிரதேசத்தில் அழுத்தங்களை ஏற்படுத்தும் வியாபாரம் தீங்கு விளைவிக்கும் வியாபாரம், அழுத்தங்கள் மற்றும் தீங்குகளை விளைவிக்கும் வியாபாரம் தொடர்பான துணை விதி
- iv) நகர சபை பிரதேசத்தில் உணவகம் மற்றும் விடுதி தொடர்பான துணை விதி
- v) நகர சபை பிரதேசத்தில் பிண எரிப்பகங்கள் தொடர்பான துணை விதி
- vi) நகர சபை பிரதேசத்தில் போசணைச் சாலை தொடர்பான துணை விதி
- vii) நகர சபை பிரதேசத்தில் மீன் விற்பனை நிலையங்கள் தொடர்பான துணை விதி
- viii) நகர சபை பிரதேசத்தின் நகர சபை வீதிகளில் பயணிக்கும் நிறை கூடிய வாகனங்கள் மற்றும் அவற்றின் வேக வரையறைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான துணை விதி
- ix) நகர சபை பிரதேசத்தினுள் சுற்றுலா வியாபாரத் துறை தொடர்பான துணை விதி
- x) நகர சபை பிரதேசத்தினுள் விளம்பர அறிவித்தல் தொடர்பான துணை விதி
- xi) நகர சபை அதிகார பிரதேசத்தினுள் முச்சக்கர வண்டித் தரிப்பிடங்கள் தொடர்பான துணை விதி
- xii) நகர சபை சேவைக்கான கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணை விதி
- xiii) நகர சபை அதிகாரப் பிரதேசத்தின் விளையாட்டு மைதானம் தொடர்பான துணை விதி
- xiv) நகர சபை அதிகார பிரதேசத்தின் இறைச்சி விற்பனை நிலையங்கள் தொடர்பான துணை விதி
- xv) நகர சபை அதிகார பிரதேசத்தின் ஈமச் சடங்குச் சேவைகளை வழங்கும் நிலையம் தொடர்பான துணை விதி

என்ற துணை விதிகள் அன்றைய தினம் 2015.06.09 ஆந் திகதி மாகாண சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 2015.07.09 ஆந் திகதி நடைபெற்ற சட்ட நியதிச் சட்ட செயற்குழுக் கூட்டத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் அச் செயற்குழுவிலிருந்து கிடைக்கப்பெற்ற சிபாரிசுகள் தொடர்பாக கருத்திற்கொண்டு அங்கீகரிக்க வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது.

**05.** **உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா) :**

**பிரேரணை :**

**<u>மேல் மாகாணத்தின் முதலமைச்சர் நிதித் திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட நகல் பிரதி துணை விதி (மேல் மாகாணத்தின் பிரதேச சபையின் அதிகார பிரதேசங்களுக்கு உரிய)</u>**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து கூறப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (உடன்பாடு காணப்பட்ட துணை விதி) சட்டத்தின் 02 ஆவது பிரிவின் 01 ஆவது உப பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு,

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1888/47 ஆம் இலக்க 2014.11.14 ஆந் திகதி அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதன் பின் 1988 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விலைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (உடன்பாடு காணப்பட்ட துணை விதி) சட்டத்தின் 02 ஆவது பிரிவின் (03) ஆவது உப பிரிவின் கீழ் அங்கீகரிக்க வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது. என்ற பிரேரணை 2015.06.09 ஆந் திகதி இம் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நகல் பிரதி துணை விதிகள்

அதாவது அத் துணை விதிகள் ஆவன

- i) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அலங்கரிப்புப் பணிகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான துணை விதி
- ii) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வெதுப்பகம் தொடர்பான துணை விதி
- iii) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அழுத்தங்களை ஏற்படுத்தும் வியாபாரம் தீங்கு விளைவிக்கும் வியாபாரம், அழுத்தங்கள் மற்றும் தீங்குகளை விளைவிக்கும் வியாபாரம் தொடர்பான துணை விதி
- iv) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் உணவகம் மற்றும் விடுதி தொடர்பான துணை விதி
- v) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பிண எரிப்பகங்கள் தொடர்பான துணை விதி
- vi) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் போசனைச் சாலை தொடர்பான துணை விதி
- vii) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் மீன் விற்பனை நிலையங்கள் தொடர்பான துணை விதி
- viii) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் நகர சபை வீதிகளில் பயணிக்கும் நிறை கூடிய வாகனங்கள் மற்றும் அவற்றின் வேக வரையறைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான துணை விதி
- ix) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் சுற்றுலா வியாபாரத் துறை தொடர்பான துணை விதி
- x) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் விளம்பர அறிவித்தல் தொடர்பான துணை விதி
- xi) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் முச்சக்கர வண்டித் தரிப்பிடங்கள் தொடர்பான துணை விதி
- xii) பிரதேச சபை சேவைக்ன கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணை விதி
- xiii) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் விளையாட்டு மைதானம் தொடர்பான துணை விதி
- xiv) பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் இறைச்சி விற்பனை நிலையங்கள் தொடர்பான துணை விதி
- xv) பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஈமச் சடங்குச் சேவைகளை வழங்கும் நிலையம் தொடர்பான துணை விதி

என்ற துணை விதிகள் அன்றைய தினம் 2015.06.09 ஆந் திகதி மாகாண சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 2015.07.09 ஆந் திகதி நடைபெற்ற சட்ட நியதிச் சட்ட செயற்குழுக் கூட்டத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் அச் செயற்குழுவிலிருந்து கிடைக்கப் பெற்ற சிபாரிசுகள் தொடர்பாக கருத்திற் கொண்டு அங்கீகரிக்க வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது.

**06. நிதி விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா) :**

**பிரேரணை :**

**<u>2015 குறை நிரப்பு மதிப்பீடு - 01</u>**

"மேல் மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் காரியாலயங்கள் உள்ளூராட்சித் தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்காக அரச நிர்வாக சுற்றறிக்கை 24/2014, 24/2014(1) மற்றும் 5/2015 ஆகியவற்றின் மூலம் அதிகரிக்கப்பட்ட இடைக்கால படியினைச் செலுத்துவதற்கும் கட்டாயமாக செலுத்த வேண்டிய சம்பளம், ஆசிரியர்களின் நிலுவைச் சம்பளம் மற்றும் படியினைச் செலுத்துவதற்குத் தேவையான மேலதிக ஏற்பாட்டினை ஏற்படுத்துவதும்,

கல்வித் திணைக்களத்தின் ஆசிரியர்களினது / உத்தியோகத்தர்களினது சொத்துக் கடனுக்கான வட்டியினைச் செலுத்துவதற்குத் தேவையான மேலதிக ஏற்பாட்டினை ஏற்படுத்துதல் மற்றும் செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான மேலதிக மீண்டெழும் ஏற்பாட்டினை ஏற்படுத்துவதற்கும்,

கல்வி மற்றும் சுகாதார துறைகளுக்காக 2014 ஆம் ஆண்டில் உலக வங்கியின் உதவியின் கீழ் வழங்கப்பட்ட நிதியில் செலவு செய்யப்படாமல் மீதியாக உள்ள நிதியினை அத் துறைகளின் அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு தேவையான ஏற்பாட்டினை ஏற்படுத்துவதற்கான தேவைகளுக்கு என

2015 ஆம் ஆண்டில் குறைநிரப்பு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள படியால் அரச மானியமான ரூபா 7,508,132,000/- உம் 2014 ஆண்டில் உலக வங்கியின் உதவியின் கீழ் அரசிடம் இருந்து கிடைக்கப் பெற்ற மானியத்தில் இருந்து மீதமாகிய ரூபா 118.142.000/- உம் ஆனவை நிதி மார்க்கங்களினால் தீர்த்துக் கொள்ள எதிர்ப்பார்க்கப்படும் மீண்டெழும் செலவான ரூபா 7,508,132,000/- உம் மூலதனச் செலவான ரூபா 118.142.000/- உம் ஆன முழு ஏற்பாடான ரூபா எழுநூற்று அறுபத்தி இரண்டு கோடியே அறுபத்தி இரண்டு இலட்சத்து எழுபத்தி நான்காயிரம் (ரூபா 7,626,274,000/-) ஆக தயாரிக்கப்பட்ட 2015 குறை நிரப்பு மதிப்பீடு - 01 இனை அங்கீகரிக்க வேண்டும்."

{ 2015 குறை நிரப்பு மதிப்பீடு - 01 என்ற பெயர் கொண்ட நகல் பிரதி ஆவணம் 2015.09.08 ஆந் திகதிக்குரியதாக காணப்பட்ட சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலுடன் கௌரவ உறுப்பினர்களுக்கு கிடைப்பதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. }

**07. நிதி விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா) :**

**பிரேரணை :**

**2015 குறை நிரப்பு மதிப்பீடு - 01 க்கு உரிய ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்**

"2015 ஆம் ஆண்டில் குறை நிரப்பு மதிப்பீடு - 01 க்குத் தேவையான ரூபா எழுநூற்று அறுபத்தி இரண்டு கோடியே அறுபத்தி இரண்டு இலட்சத்து எழுபத்தி நான்காயிரம் (ரூபா 7,626,274,000/-) நிதியை மேல் மாகாண சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கும், அம் மேல் மாகாண சபை நிதியத்திற்கு இலங்கை அரசினால் மானியமாகவோ வேறு முறையிலோ வழங்கப்படும் நிதியினை பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்படும் 2015 இன்..... ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தினை அங்கீகரிக்க வேண்டும் ."

{ 2015 குறை நிரப்பு மதிப்பீடு - 01 க்கு உரிய ஒதுக்கீட்டு நியதிச் சட்ட நகல் பிரதி ஆவணம் 2015.09.08 ஆந் திகதிக்குரியதாக காணப்பட்ட சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலுடன் கௌரவ உறுப்பினர்களுக்கு கிடைப்பதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. }

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2015.09.09 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.